*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*26-08-2025 TUESDAY 12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

- *மின்சார வாகனங்கள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

- *நவீன போர் முறைகள் குறித்து, தொடர் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.*

- *பீகார் புதிய தொழில் ஊக்குவிப்புக் கொள்கையை அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் வெளியிட்டுள்ளார்*

- *உலகில் அமைதியை நிலைநாட்ட இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி பாராட்டு தெரிவித்துள்ளார்.*

- *உலக ஜூனியர் வலுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.*

*>>>>>><<<<<<*

*மின்சார வாகனங்கள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*குஜராத் மாநிலம், Halsalpur-ல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மின்சார கார்களை 100 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்கள், தற்போது உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது இத்துறையில் நமது வலிமையை எடுத்துக்காட்டுவதாக என்று அவர் கூறினார்.*

*நமது நாட்டில் உள்ள திறன் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இதனை சாத்தியமாக்கியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

இடுபொருள் செலவை குறைத்து, வேளாண் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

குவாலியரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் தொழில் இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், பேரிடர் காலங்களில் நிவாரணம் வழங்கவும் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டிய அமைச்சர், கடந்த பத்தாண்டுகளில் வேளாண் உற்பத்தி 44 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப, நவீன போர் முறைகள், தொழில்நுட்பம், தலைமைப் பண்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து, தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், அம்பேத்கர் நகரில் உள்ள ராணுவப் பயிற்சி கல்லூரியில், இன்று Ran Samvad 2025 என்ற முப்படையினருக்கான கூட்டுப் பயிலரங்கை தொடங்கி வைத்து, அவர் பேசினார்.

உலக அரங்கில் இந்தியாவின் நிலை உயர்ந்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, வலிமையான – பாதுகாப்பான மற்றும் சுயசார்புள்ள ராணுவத்தை உருவாக்குவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

தொழில்நுட்பத்தில் மட்டுமின்றி, சிந்தனை மற்றும் செயல்பாட்டிலும் புதுமைகளை புகுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக – பாதுகாப்புத் தளவாட உற்பத்தியில், சுயசார்பை அடைவது மிகவும் அவசியம் என்றும் ஜெனரல் அனில் சௌஹான் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

பீகாரில் தொழில்துறை முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், புதிய தொழில் ஊக்குவிப்புக் கொள்கையை அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் வெளியிட்டுள்ளார்.

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தப் புதிய கொள்கையின் படி, முதலீட்டாளர்களுக்கு இலவச நிலம் மற்றும் 40 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.*

*புதிதாக தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு 14 ஆண்டுகளுக்கு மாநில சரக்கு மற்றும் சேவை வரி சலுகை அளிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.*

*இதுதவிர, ஏற்றுமதி ஊக்குவிப்பு வரம்பும் ஆண்டுக்கு 40 லட்சம் ரூபாயாக இருக்கும் என்றும் திரு. நிதிஷ்குமார் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ஜப்பானிய தொழில்துறையினருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானதாக அமைந்ததாக சத்திஷ்கட் முதலமைச்சர் திரு. Vishnu Deo Sai தெரிவித்துள்ளார்.*

*ஜப்பானின் Osaka நகரில் நடைபெறும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில், சத்திஸ்கட் வார கொண்டாட்டத்தை தொடங்கி வைத்த பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கண்காட்சி இந்திய கலாச்சாரத்தை உலகிற்கு எடுத்துரைக்க சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளதாக கூறினார்.*

*சத்திஷ்கட் வார கொண்டாட்டம், அந்த மாநிலத்திற்கும் இந்தியாவிற்கும் பயனளிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.*

*சத்திஷ்கடில் முதலீடு செய்வது தொடர்பாக, ஜப்பானிய தொழில் நிறுவனங்களான NTT மற்றும் JETRO-வின் தலைமைச் செயலதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன், மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*ஜப்பானில் நிலவும் மனிதவள பற்றாக்குறை, சத்திஷ்கட் மக்கள் வேலைவாய்ப்பை பெற உதவிகரமாக இருக்கும் என்றும் திரு. Vishnu Deo Sai தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*உலகில் அமைதியை நிலைநாட்டி, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு, யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி பாராட்டு தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், யுக்ரைன் சுதந்திர தினத்தை ஒட்டி, வாழ்த்து தெரிவித்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரவித்துள்ளார்.*

*யுக்ரைன் – ரஷ்யா இடையிலான போரை கண்ணியமான முறையில் முடிவுக்கு கொண்டு வர, உலக நாடுகள் பாடுபட்டு வருவதாக குறிப்பிட்டுள்ள அவர், இதில் இந்தியாவின் ஆதரவை யுக்ரைன் தொடர்ந்து எதிர்பார்ப்பதாக கூறியுள்ளார்.*

*ஒட்டுமொத்த உலகின் பாதுகாப்பை உறுதி செய்ய, தூதரக ரீதியான முயற்சிகளை தொடர்வது அவசியம் என்றும் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, நாட்டின் நீலப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் மத்திய அரசு பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.*

*தமிழகத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ், கடற்பாசி வளர்ப்பு மற்றும் மீன்பிடி சாதனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி பயனளிப்பதாக மீனவப் பெண்கள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – மீனவப் பெண்கள் 42 sec.)*

*>>>>>><<<<<<*

*ஹிமாச்சலப்பிரதேசத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இம்மாதம் 31ஆம் தேதிவரை மழை நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தொடர் மழையால், இம்மாநிலத்தின் ஷிம்லா, மண்டி உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பஞ்சாபில் பெய்யும் மழையால், ராவி, பியாஸ். சட்லஜ் உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.*

*இதனால், குர்தாஸ்பூர் மற்றும் Fazilka மாவட்டங்களுக்கு உட்பட்ட 20 கிராமங்களைச் சேர்ந்த கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*ஜம்மு கஷ்மீரிலும் நேற்றிரவு முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.*

*ஜம்மு, உதம்பூர், ரஜோரி உள்ளிட்ட 6 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டதை அடுத்து, அங்கு, 10 மற்றும் 11ஆம் வகுப்பு தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.*

*>>>>>><<<<<<*

*தில்லி முன்னாள் அமைச்சரும், ஆம் ஆத்மி மூத்த தலைவருமான திரு. சவ்ரப் பரத்வாஜ் உள்ளிட்டோருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.*

*தில்லியில் மருத்துவமனை கட்டுமானப் பணியில் நடைபெற்ற முறைகேடு தொடர்பான சட்டவிரோத பணப்பரிமாற்ற குற்றச்சாட்டின் பேரில், இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*திரு. சவ்ரப் பரத்வாஜின் இல்லம், அலுவலகங்கள், தனியார் கட்டுமான நிறுவனங்கள் உள்ளிட்ட 13 இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.*

*>>>>>><<<<<<*

*உலக ஜூனியர் வலுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.*

*கோஸ்ட்டாரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 53 கிலோ எடைப்பிரிவில் Keerthan-ம், 66 கிலோ எடைப்பிரிவில் Vamsi-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில், Sadiya வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*>>>>>><<<<<<*

*காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Bhavna Gogoi வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 58 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>>><<<<<<*

Sinquefield கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா முதலிடத்தில் உள்ளார்.

செயின்ட் லூயிஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 7வது சுற்று முடிவில் அவர் 4 புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்றுள்ளார்.

>>>>>><<<<<<

அபுதாபி செஸ் போட்டியில் இந்தியா 3 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.

>>>>>><<<<<<

அஸ்தானாவில் நடைபெற்று வரும் Boccia சேலஞ்சர் போட்டியில் இந்தியாவின் Pydiramu Kottini வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டி, வரும் நவம்பர் 3ஆம் தேதி தொடங்கி, 14ஆம் தேதிவரை, தோஹாவில் நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Lakshmi Vyshakh இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<